**மட்டக்களப்பு மாநகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்பிரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கட்கும் அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் மட்டக்களப்பு மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ)மாநகர சபையின் கணக்குகள் அட்டுறு அடிப்படையில் செய்யப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டில் அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வைத் தொகை கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட் டிருக்கவில்லை. | அறவிடப்படவேண்டியவை தொடர்பில் அட்டுறு கொள்கை பின்பற்றப்படவேண்டும் | மீளாய்வாண்டில் அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வைத் தொகையானது அடுத்த வருட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ)மாநகர சபையினால் கணக்கீடப்பட்டு 2017 மற்றும் 2018 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் கைமாற்றப்பட்ட, சீதனம் மற்றும் நன்கொடைகள் மூலம் உரிமைமாற்றம் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்களின் மீதான முத்திரை தீர்வைத் ரூபா 70,094,691 தொகை வருமானமாக தெரிவிக்கப்பட்ட | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும் | முத்திரை தீர்வைத் ரூபா 70,094,691 தொகை வருமானமாக தெரிவிக்கப்பட்ட போதிலும், கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கொன அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 700,947 தொகை மற்றும் |

| | | |
|---|---|---|
| போதிலும், கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கென அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 700,947 தொகை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய ரூபா 249,600 தொகை என்பவை செலுத்தப்பட்டதாக மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | மட்டக்களப்பு மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய ரூபா 249,600 தொகை என்பவை எமது வருமானமாகக் காட்டப்படாததாலேயே செலவாகவும் காட்டப்படவில்லை. அடுத்த வருடம் வருமானமாகவும் செலவாகவும் காட்டப்படும். |
| (இ) மாநகர சபையினால் மீளாய்வாண்டின் ஏப்பிரல் தொடக்கம் யூன் இறுதிவரை மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வையானது ரூபா 12,363,900 தொகையாக கணிக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களில் நிலுவை முத்திரை தீர்வை காட்டப்பட்டதினால் மீளாய்வாண்டில் இத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | அடுத்தவருடம் இவ்வாறான தவறுகள் சீர்செய்யப்படும். |
| (ஈ) யூனாப்ஸ் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற 01 மடிக்கணனி மற்றும் 01 மோட்டார் சைக்களின் பெறுமதிகள் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்படும் என 2017 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், இவற்றின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டி இருக்கவில்லை. | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | அடுத்தவருடம் இவ்வாறான தவறுகள் சீர்செய்யப்படும். |
| (உ) மீளாய்வாண்டின் இறுதியில் கணக்ககளில் காட்டப்பட்ட ரூபா 116,649,165 தொகையான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானமாத்தில் | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | அடுத்தவருடம் இவ்வாறான தவறுகள் சீர்செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| பிடித்துவைத்தல் வரி கழிக்கப்பட்ட தொகையே வருமானமாக காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி தொகை கணிக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) மீளாய்வாண்டில் அறவிடப்படவேண்டிய ரூபா 55,469,852 வீதவரிகளில் ரூபா 38,689,131 தொகை அறவிடப்பட்டபோதிலும், அவ்வறவிட்டின் மீதான வரியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கழிவுத் ரூபா 1,510,960 தொகை கணக்குகளில் கொடுத்த கழிவாக காட்டப்பட்டிருக்கவில்லை. | துள்ளியமாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும் | மீளாய்வாண்டில் வரியிருப்பாளர்களிடமிருந்து பெறப்படும் தண்டப்பணமும் கழிவுத்தொகையும் ஓரளவு சமமாகக் காணப்படுவதாலேயே கணக்குகளில் மொத்தம் காட்டப்படுகிறது. இனிவரும் காலங்களில் தண்டம் பெற்ற வருமானமாகவும், கழிவு கொடுத்த கழிவாகவும் கணக்குகளில் காட்டப்படும். |
| (எ) மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வீதவரிகளின் மதிப்பிட்டுப் பெறுமதி ரூபா 30,667,275 தொகையாக கணிப்பிடப்பட்ட போதிலும், கணக்குகளில் ரூபா 30,000,000 தொகையாக காட்டப்பட்டதினால் மீளாய்வாண்டிற்கான நிலுவை வீதவரிகளின் பெறுமதி ரூபா 667,275 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | அனுமதிகள் பெற்றுக்கொள்ளும் வரை முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வீதவரிகளின் மதிப்பிட்டுப் பெறுமதி ரூபா 667,275 தொகையால் குறைத்துக் காட்டப்படக் காரணம் மாநகர சபைச் சொத்துககளுக்கும் வரி மதிப்பிடப்பட்டுள்தால் அவற்றைப் பதிவழிக்க அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) மாநகர சபையினால் மீளாய்வாண்டு இறுதிவரை உள்ளபடியான காணிகள் மற்றும் கட்டிடங்களின் விபரங்கள் மற்றம் அதன் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | முறையாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் | அடுத்தவருடம் இவ்வாறான தவறுகள் சீர்செய்யப்படும். |

1.3.2 நிகழத்தக்க பொறுப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மாநகர சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்குகள் மற்றும் வெளித்தரப்பினரால் மாநகர சபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதிவரை செலுத்தப்படவேண்டிய தொகைகள் மற்றும் வெளித்தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகைகள் கணக்கிடப்பட்டு நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மாநகர சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்குகள் வெளித்தரப்பினர்களிடமிருந்து அறவிடவேண்டிய தொகைகள் அறவிடவேண்டிய நிலுவைகளாகக் காட்டப்பட்டுள்ளதுடன் அது ஐந்தொகையிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள வீத வரிகள், கடையறை மற்றும் ஏனைய வருமானங்கள் கூட்டு மொத்த ரூபா 36,448,190 தொகைகள் காணப்பட்ட போதிலும், இவ்நிலுவைத் தொகையில் 75% சதவீதமானவை தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள வீதவரிகள், மற்றும் ஏனைய வருமானங்கள போன்றவற்றில் கூடுதலான நிலுவைகள் அறவிடப்பட்டுள்ளதுடன் அவை ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ii) மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள வீத வரிகள் ரூபா 16,780,720 | துல்லியமாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு | மீளாய்வாண்டில் வரியிருப்பாளர்களிட மிருந்து பெறப்படும் |

| | | |
|---|---|---|
| தொகையானது ஆதன உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,510,959 தொகையான கொடுத்தகழிவுத் தொகைகயை சீராக்காத தொகையாகும். இதனடிப்படையில் நிலுவையாக காட்டப்பட்ட தொகை உண்மையான தொகையை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | கொண்டுவரப்பட வேண்டும் | தண்டப்பணமும் கழிவுத் தொகையும் ஓரளவு சமமாகக் காணப்படுவதாலேயே கணக்குகளில் மொத்தம் காட்டப்படுகிறது. இதனடிப்படையில் நிலுவையாக காட்டப்பட்ட தொகை ஏறத்தாழ உண்மையான தொகையாகவே காணப்படுகிறது. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 28,808,920 தொகை ஐந்து வருடங்களுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்படுகின்ற போதிலும், அவற்றை இணங்கண்டு தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழ்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் தொகையானது தற்போது இணங்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

## 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

(அ) தகவல் சமர்ப்பிக்கப்படாமை

ரூபா 195,232,508 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரியதாக எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த செய்ய முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) பொறி இயந்திரம் | 29,975,090 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பொறி இயந்திரம், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும், களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள், தளபாடம் மற்றும் பொருத்துக்கள், செலவுக் கடன் வழங்குனர் போன்றவற்றுக்கான பெறுமதிகள் ஒரு விசேடகுழுவின் மூலம் பெறுமதியிடப்பட்டு சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| (ii) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 185,708,397 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iii) களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 57,413,793 | இருப்புப் பதிவேடுகள், விபரப்பட்டியல் | | |
| (iv) தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 19,568,397 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (v) செலவுக் கடன் வழங்குனர் | 80,623,811 | செலுத்தவேண்டிய கடன் பதிவேடு மற்றும் கொடுப்பனவு உறுதிச் சிட்டைகள் | | |

1.3.5 இணக்கமின்மைகள்

1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்.<br>(i) நிதிப்பிரமாணம் 41(2) | மீளாய்வாண்டில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைக்காக நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியன ரூபா 27,981,252 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வியந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அமைச்சின் செயலாளரது அனுமதி பெறப்பட வேண்டியிருந்தும் அவ் அனுமதி பெறப்படாது இயந்திரங்கள் கொள்வனவு இடம்பெற்றிருந்தது. | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | பொதுவாக வாகனங்கள் கொள்வனவு செய்யும் போது மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின்படி மாநகர நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்படுவதால் அதற்கான அனுமதி மாநகர சபைப் பொதுக் கூட்டத்திலேயே பெறப்படுகிறது. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டு இறுதிவரை பல்வேறுபட்ட தேவைகளுக்கு வைப்பிலிடப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கணக்ககளில் காட்டப்பட்டுவரும் ரூபா 5,777,898 தொகையான வைப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | 2019 இல் கூடுதலான வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை | | |
| (ஆ) பொது நிர்வாகச சுற்றறிக்கைகள்<br>-------------------------- | | | |
| (i) 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் "அ" பந்தி | அலுவலகம் ஒன்றில் கடமைபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் பொது விடுமுறை தினங்களில் மற்றும் வார இறுதி நாட்களில் பணியாற்றுவதற் காக அனுமதிக்கப்பட்ட விடுமுறை தினக் கொடுப்பனவை பெறுவதற்கு அவ் நாளொன்றிற்கு எட்டு (08) மணித்தியாலத்திற்கு குறையாமல் கடமையாற்றும் அலுவலகர் ஒருவருக்கு விடுமுறை தினக்கொடுப் பனவு வழங்கப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ள போதிலும், அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை முராணக பணியாற்றிய 04 பதவிநிலை உத்தியோகத்தர்களுக் கு அலுவலக கடமை நேரத்தில் எட்டு (08) மணித்தியாளத்தை பூர்த்தி செய்யாத நிலையில் அத் தினங்களுக்கு ரூபா 14,849 தொகை விடுமுறைக் கொடுப்பனவு வழங்கப்பட் டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | இத்தகைய 04 உத்தியோ கத்தர்களும் ஒரு சில நிமிடங்கள் குறைவடைந்த தாலேயே இவ் விடுமுறைக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் எழாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் "இ" பந்தி | மாதமொன்றிற்கு இரண்டு (02) நாட்களினை விட மேலான நாட்களிற்கு அலுவலர் ஒருவர் கடமையாற்ற தேவைப்படின் உரிய அமைச்சினது | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | மாதமொன்றிற்கு இரண்டு (02) நாட்களினை விட மேலான நாட்களிற்கு அலுவலர் ஒருவர் கடமையாற்ற தேவைப்படின் |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளரின் முன்கூட்டியே தனிப்பட்ட அனுமதி பெறப்பட வேண்டுமென சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தும், மாநகர சபையில் கடமையாற்றும் மற்றும் கடமையாற்றிய 06 பதவிநிலை உத்தியோகத் தர்கள் இரண்டு நாட்களினை விட மேலான விடுமுறை நாட்களில் கடமைகளை மேற்கொள்வதற்கு முன்னனுமதியை மாகாண பிரதம செயலாளரிட மிருந்து பெற்றுக்கொள்ளாது கடமை யாற்றியமைக்காக ரூபா 348,788 தொகை விடுமுறை தினங்களுக் காக கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | | உரிய அமைச்சினது செயலாளரின் முன்கூட்டியே தனிப்பட்ட அனுமதி பெறப்படவேண்டுமெ ன சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தாலும் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் 7/1/2000 இலக்க சுற்றறிக்கையின்படி உள்ளூராட்சி மன்றங்களின் அத்தியாவசிய சேவைகளை நடாத்திச் செல்வதற்காக பதவிநிலை மற்றும் தள உத்தியோகத்தர்க ளுக்கு 05 நாட்கள் வழங்கப்படலாமென க் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. |
| (iii) 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய சுற்றறிக்கை 09/2009 இன் IV பிரிவில் | நேரத்தின் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் போன்ற நிரந்தர கடமை நேரத்திற்கு பின்னராக செலுத்தப்படும் படிகளின் விடயத்தில் நேரத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் அந்நேரத்தை விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டுமென சுற்றறிக்கையில் கூறிப்பிடப்பட்டுள்ள இருந்தும், 05 பதவிநிலை அலுவலர்கள் உள்வருகை மற்றும் | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | பதவிநிலை உத்தியோகத்தர் களைப் பொறுத்தவரையில் மின்சாரத்தடை காரணமாக வும் சில சந்தர்ப்பங்களில் அவசர நிலைமைகளில் வெளிக்கடமைகளி ல் ஈடுபடும் போதுமே இவ்வாறு விரல டையாளப் பதிவு மேற்கொள்ளாது விடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வெளிச் செல்கை கைவிரல் அடையாள நேரப்பதிவினை 37 விடுமுறை தினங்களில் பூர்த்தி செய்யாத நிலையில் மாநகர சபையினால் விடுமுறை தினக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | | |
| (இ)ஏனைய சுற்றறிக்கைகள் --------------------------------- | | | |
| (i) நிதி அமைச்சின் 2016 மார்ச் 17 திகதிய வரவு செலவுத்திட்ட சுற்று நிருப இல 1/2016 இன் பிரிவு 5.1 பிரிவு | நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியன நிதி ஏற்பாடுகளின் கிடைப்பன வினைக் கருத்திற் கொண்டு பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் உரிய அமைச்சின் அல்லது மாகாண சபைகளின் மூலம் நேரடியாகக் கொள்வனவு செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்ட போதிலும், இக் கொள்வனவுகள் குறித்த அங்கீகாரம் பெறப்படாது கொள்வனவு இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின்படி வாகனங்கள் கொள்வனவு செய்யும் போது சபையின் அனுமதியுடன் கொள்வனவு செய்ய முதல்வருக்கு அதிகாரமுண்டு என்பதாலும் மாநகர நிதி என்பதால் சபையின் அனுமதியுடனேயே கொள்வனவு செய்யப்பட்டது. |
| (ii)இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி 2.11.1 (இ) பிரிவு | பொருட்கள் மற்றும் சேவைகள் நடைமுறையில் பெறுகைக்கால அட்டவணை, பெறுகை முறை மற்றும் விலைக்கேள்வி ஆவணத்தின் வகை என்பன பற்றி உடன்படுவதற்குப் பெறுகைக் குழுவுடனும், | சட்ட எற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப்பட வேண்டும். | பொருட்கள் கொள்வனவு செய்யும் போது அந்தந்த நிலையியற் குழுக்களின் சிபாரிசுடனும் பொதுச் சபையின் அனுமதியுடனுமே கொள்வனவுகள் இடம் பெறுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப மதீப்பீட்டுக் குழுவுடனும் கூட்டாக முன்னாயத்தக் கூட்டம் (Pre Bids meeting) நடாத்தப்படவேண்டும். இருந்தும், நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியவற்றின் கொள்வனவின் போது அக்கூட்டம் நடை பெற்றிருக்கவில்லை. | | |
| (iii) கிழக்கு மாகாண 2018 யூன் 04 ஆம் திகதிய மாகாண நிதிச்சுற்றறிக்கை இல PT/04(2)/2018 பந்தி 7.1 இன் பிரகாரம் | பொருட்கள் கொள்வனவு மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நடைமுறையில் ஐந்து (5) மில்லியன் பெறுமதிக்கு மேற்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யும் போது திணைக்களப் பெறுகைக் குழுவின் சிபார்சுகளுக்கமைய கொள்வனவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்தும், மாநகர சபை யானது பெறுகைகள் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் பிரதி நிதிகளை அடிப்படையாக வைத்து பிராந்திய பெறுகைக் குழுவினை நியமித்து அவர்களின் சிபார்சுக் கமைய நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியவற்றினை இச்சுற்றறிக்கைக்கு முராணக கொள்வனவை மேற்கொண்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின்படி வாகனங்கள் கொள்வனவு செய்யும் போது மாநகர நிதி என்பதால் அதற்கு எல்லைகள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடவில்லை. |

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 95,843,811 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,268,918 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி யும் வரியும் | 31,500,000 | 58,757,243 | 41,232,501 | 17,524,742 | 23,800,000 | 47,230,435 | 20,541,050 | 26,689,385 |
| வாடகைகள் | 22,850,100 | 28,351,378 | 12,534,754 | 15,816,624 | 28,750,100 | 30,374,729 | 14,015,125 | 16,359,604 |
| அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 11,640,000 | 13,427,672 | 10,683,589 | 2,744,083 | 11,145,000 | 13,036,787 | 10,949,115 | 2,087,672 |
| ஏனைய வருமானம் | 101,405,000 | 4,296,569 | 3,678,961 | 617,608 | 89,385,000 | 4,591,291 | 3,944,722 | 646,569 |

2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் 20 வட்டாரங்களில் 48 கிரம சேவையாளர் பிரிவுகளில் 42,477 அசைவற்ற ஆதானங்கள் மீது வீதவரி மதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும், 38,476 அசைவற்ற ஆதானங்கள் மீது மாத்திரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | மாநகர சபையின் கட்டளைகள் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | தங்களால் குறிப்பிடப்பட்ட அனைத்து அசைவற்ற ஆதனங்கள் மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் 15 பேர் கொண்ட ஒருகுழுவொன்று நியமிக்கப்பட்ட பெறுமதி மதிப்பிடப்படுகிறது. மதிப்பீடு நிறைவடைந்ததும் வீதவரி அறவீடு செய்யப்படும். |
| (ஆ) வீதவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு | மாநகர சபையின் கட்டளைகள் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை | வீதவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன |

| | | |
|---|---|---|
| “K”படிவங்கள் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அப்படிவங்களில் அடிப்படையில் கட்டணங்களை முன்கூட்டி செலுத்தும் உரிமையாளர்களுக்கு வீதவரி மீதான கழிவு வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும், இப் படிவங்கள் சில படிவங்கள் குறித்த காலம் நிறைவேறிய பின்னரே உரிமையாளர்களுக்கு வினியோகிக்கப்படுதல் மற்றும் வினியோகிக்காமல் விடுதல் ஆகிய செயற்பாடுகளினால் வீதவரி மீதான கழிவினை உரிமையாளர்கள் இழந்துவிட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. | எடுக்கப்படுதல் வேண்டும் | உரிமையாளர்களுக்கு “K” படிவங்கள் அனுப்பிவைக்கப்படுவது வழக்கம். இருப்பினும் வருமானவரிப் பரிசோதகர்கள் பற்றாக்குறையே இப்படிவங்கள் வழங்கப்படாமைக்குக; காரணமாகும். தற்போது இதனை நிவர்த்தி செய்யும் வகையில; online மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) சபையினால் ஆதன உரிமையாளர் வீதவரிகளை உரிய காலத்திற்குள் செலுத்த தவறும்பட்சத்தில் அவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. அவ்வாறு மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தண்டப்பணம் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்க சமார்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | துல்லியமாக கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவேண்டும் | தற்போது வீதவரிக்காக நடைமுறைப்படுத்தும் பொதியில் இவ்வாறான நடைமுறை உள்வாங்கப்படாததாலேயே கழிவையும் தண்டத்தையும் சமமாகக் கருதி கணக்குகளில் காட்டாது மொத்த வருமானம் மாத்திரம் காட்டப்படுகிறது. |

2.2.3 ஏனைய வருமானம்

2.2.3.1 உல்லாச விடுதிகளின் வருமானம் மீதான தீர்வை

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்பட்ட உல்லாச வீடுதிகள் மீதான வருமானவரி தொடர்பில் மாநகர சபை அதிகார எல்லைக்குள் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாச அபிவிருத்திச் சட்டத்திற்காமைய நடத்தப்பட்டு வருகின்ற ஒரு ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிட விடுதிகள் ஆகியன அவ்நோக்கங்களுக்காக | மாநகர சபையின் கட்டளை சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | தற்போது அறவிடப்படவேண்டிய மிகுதித் தொகையையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

பயன்படுத்துகின்ற அத்தகைய ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிட விடுதிகள் ஆகியவை பதிவு செய்யப்பட்ட அல்லது இலங்கை உல்லாச சபையால் அங்கிகரிக்கப்பட்ட அல்லது பரிந்துரைக்கப்பட்ட பிரிவுக்குள் காணப்படின் அவற்றுக்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247A இன் 2 ஆம் உப பிரிவுக்கமைய, பெறப்பட்ட வருமானத்தில் 1% சதவீதத்திற்கு மேற்படாத தீர்வையாக அறவிடப்படவேண்டும்.
கணக்காய்வு மாதிரியின்படி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதிவரையான காலப்பகுதியில் மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் 07 ஹோட்டல்களில் 04 ஹோட்டல்கள் மீதான வரி ரூபா 1,195,757 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 பெப்ரவரி 20 ஆம் திகதிவரை ரூபா 683,337 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது.
அறவிடப்பட வேண்டிய மிகுதி தொகையான ரூபா 512,390 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3.2 காணி விற்பனைத் தீர்வை

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2017 ஆம் மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைமாற்றம் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247E (1),(2) ஆம் உப பிரிவுகளுக்கமைய, அசைவற்ற ஆதன விற்பனைப் பெறுமதியில் | மாநகர சபையின் கட்டளை சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2017 ஆம் மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைமாற்றம் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பில் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 247E (1),(2) ஆம் உப பிரிவுகளுக்கமைய, ஏலவிற்பனை செய்யும் |

| | | |
|---|---|---|
| 1% சதவிதம் தீர்வையாக அறவிடப்படவேண்டிய போதிலும், கணக்காய்வு மாதிரியின்படி 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதிவரையான காலப்பகுதியில் மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் 1949 அசைவற்ற ஆதனங்கள் ரூபா 2,249,042,475 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பில் 1% சதவிதம் தீர்வையாக ரூபா 22,490,425 தொகை அறவிட கணக்காய்வுத் திகதியான 2019 ஜனவரி 30 ஆம் திகதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன்படி அன்ணளவாக வருடாந்தம் ரூபா 10 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட வருமானத்தை சபை இழந்து வருகின்றது. | | அசைவற்ற ஆதனங்களுக்கு மாத்திரமே 1% வரிஅறவிடப்படவேண்டு மென குறிப்பிடப்பட்டுள்ளது |

2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,582,620 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 20,259,560 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

2.2.4.1 முத்திரைக் கட்டணங்கள்

மாநகர சபை அதிகார எல்லைக்குள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற காணிகள் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வையை மட்டக்களப்பு மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு யூலை தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் | முத்திரைத் தீர்வைகள் மாநகர சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | 2018 ஆம் ஆண்டு யூலை தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் மாநகர சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மாநகர சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிட கணக்காய்வுத் திகதியான 31 ஜனவரி 2019 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | | |
| (ஆ) (Financial Satute No 01 of 2008 of the Eastern Province ) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ரூபா 1,551,115 தொகை ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அவ் முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய முத்திரைத் தீர்வைகள் மாநகர சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி

மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 34 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் இவ் முக்கியமான விடயங்களுக்கு உபவிதிகள் தயாரிக்கப்பட்டிரு க்கவில்லை. | மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 34 சில முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், உப விதிகள் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சபையினால் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டியபோதிலும், அச்செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேண்டும். | தற்போது வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிராகாரம் | 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் தொடர்பாக அளவிடுவதற்கான |

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------

சபையின் பொது முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் இங்கு உள்ளடக்கப்படல் வேண்டும்.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01. மீளாய்வாண்டில் நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியவற்றினை கொள்வனவு செய்யும் முன்பு இவ்வியந்திரத்தின் தேவைகள், திட்ட முன்மொழிவுகள் மற்றும் நிதி தேவைப்பாடு என்பவற்றினை கருத்தில் கொண்டிருக்க வேண்டும். இருந்தும், சபையானது இவ்வியந்தரங்களின் பாவனைக்குரிய பிரிவின் வேண்டுகோள் (சுகாதாரப் பகுதி) மற்றும் திட்ட முன்மொழிவுகள் (Proposal) என்பன இன்றி இவற்றினை கொள்வனவு செய்துள்ளது. | சுற்றறிக்கைளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | தங்களால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை இனிவரும் காலங்களிலிருந்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 02. மினிஎக்ஸவேற்றர் கொள்வனவு தொடர்பாக பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு என்பவற்றின் தீர்மானத்திற்கமைய அடிப்படையில் அனைத்து விபரங்களையும் பூர்த்திசெய்த செனொக் ட்ரேட் கொம்பனி | சுற்றறிக்கைளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | தங்களால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை இனிவரும் காலங்களிலிருந்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதென தீர்மானிக்கப்பட்டு குறித்த கம்பனிக்கு கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இருந்தும், 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி அக்கட்டளை இரத்துச் செய்யப்பட்டு பெறுகைக் குழுவின் 2018 நவம்பர் 15 தீர்மானத்துடன் தொழிநுட்பமதிப்பீட்டுக் குழுவின் இயந்திரப் பொறியியலாளரின் சிபார்சினை மாத்திரம் கருத்தில் கொண்டு இரண்டாவது வழங்குனரான யுனைட்டட் மோட்டர் பிஎல் இடமிருந்து கொள்வனவு செய்வதென தீர்மானிக்கப்பட்டு ரூபா 6,425,652 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமையானது பெறுகைக் குழுவினதும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் தீர்மானங்களில் வினைத்திறன் இன்மையை வெளிக் காட்டுகிறது.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நான்கு உழவு இயந்திரங்கள், இரண்டு காவேஜ் கொம்பக்டர்கள் மற்றும் மினி எக்ஸவேற்றர் ஆகியவற்றினை கொள்வனவு செய்வதற்காக இலங்கை பெறுகை வழிகாட்டி 2.11.1 (இ) பிரிவிற்கு அமைய பெறுகைக்கால அட்டவணை, பெறுகை முறை மற்றும் விலைக்கேள்வி ஆவணத்தின் வகை என்பன பற்றி உடன்படுவதற்குப் பெறுகைக் குழுவுடனும், தொழில்நுட்ப மதீப்பீட்டுக் குழுவுடனும் கூட்டாக ஒரு முதலாவது கூட்டம் | சுற்றறிக்கைளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை |

நடாத்தப்பட வேண்டியிருந்தும் அக்கூட்டம் நடை பெற்றிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018ம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவுக்கமைய செயற்பட வேண்டும். | அடுத்த வருடம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். |

4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | முறையாக திட்டமிடப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | 2018 இல் மாநகரசபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் ஓரளவு நடைபெற்றது. தற்போது கூடியளவு அகக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். |

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | முறையாக திட்டமிடப்பட்டு உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | 2018 இல் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் இரண்டு நடைபெற்றுள்ளது. |

4.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப் பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் தங்களால் கூறப்பட்ட கட்டுப்பாட்டுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். |
| (ஆ)பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | | |
| (இ)நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i)நிலையான சொத்துப்பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br><br>(ii)சபையில் பயன்படுத் தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | |
| (ஈ)இருப்புக் கட்டுப்பாடு | மாநகர சபையின் களஞ்சிய இருப்பானது முறையாக மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன், இருப்புத் தொடர்பான முகாமைத்துவ கட்டுப் பாடுகள் பலவீனமுள்ள தாக காணப்படுவதனால் எதிர்காலத்தில் களஞ்சிய இருப்பக்கள் தொடர்பில் மோசடிகள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. | | |